# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT
# 2024

## කෘෂිකර්ම, පශුසම්පත්, ඉඩම් සහ වාරිමාර්ග අමාත්‍යාංශය
## கமத்தொழில்,கால்நடை வளங்கள் ,காணிமற்றும் நீர்ப்பாசன அமைச்சு
## Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation

## ඉඩම් අංශය
## காணி பிரிவு
## Land Section


***"මිහිකත මැදුර"***
ඉඩම් මහ ලේකම් කාර්යාලය
*1200/6, රජමල්වත්ත පාර,*
බත්තරමුල්ල.

"மிஹிகத்த மெதுர,"
காணிச் செயலகம்
1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

"Mihikatha Medura"
Land Secretariat Office
1200/6, Rajamalwatta Rd,
Battaramulla.

# கமத்தொழில்,கால்நடை வளங்கள் ,காணிமற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## காணி பிரிவு

## செயலாற்றுகை அறிக்கை

## 2024

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01.நிறுவனத்தின் தோற்றப்பாடு / செயற்பாடுகளின் சுருக்கம் | 01 -04 |
| 1.1 அறிமுகம் | |
| 1.2 நிறுவனத்தின் நோக்கக்கூற்று, பணிக்கூற்று, இலக்கு | |
| 1.3 பிரதான செயற்பாடுகள் | |
| 1.4 ஒழுங்கமைப்புப் பட்டியல் | |
| 1.5 அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் | |
| 02.முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு | 04 -13 |
| 03.வருடத்திற்கான முழு நிதிச் செயலாற்றுகை | 14 -18 |
| 3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று | |
| 3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று | |
| 3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று | |
| 3.4 நிதிக் கூற்று குறிப்புகள் | |
| 3.5 வருமானம் ஒன்று சேர்க்கும் செயலாற்றுகை | |
| 3.6 ஒதுக்கப்பட்ட நிதியினை பயன்படுத்துதல் தொடர்பான செயலாற்றுகை | |
| 3.7 நி.ஒ 208 இன் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற நிதி | |
| 3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை | |
| 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | |
| 04. செயலாற்றுகைச் சுட்டிகள் | 18 |
| 05. நிலையான அபிவிருத்தி நோக்குகளை (SDG) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை | 19 - 22 |
| 06. மனித வளத் தோற்றப்பாடு | 22 - 24 |
| 07. இணக்க அறிக்கை | 28 - 37 |

## 2024 ஆம் வருடத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

**நிறுவனத்தின் பெயர் - கமத்தொழில் கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்பாசன அமைச்சு – காணிப் பிரிவு**
**செலவுத் தலைப்பு இலக்கம் - 122**

## 01. அத்தியாயம் - நிறுவனத்தின் தோற்றப்பாடு / செயற்பாடுகளின் சுருக்கம்

### 1.1. அறிமுகம்

1927 ஆம் ஆண்டு அரச சபையினால் காணி மற்றும் விவசாயம் தொடர்பில் உருவாக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1932 ஆம் ஆண்டு அரச காணிகளைச் சிறப்பான முறைகளில் முகாமை செய்யும் நோக்குடன் விவசாய மற்றும் காணி அமைச்சு உருவாக்கப்பட்டது. 1800 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் மிகவும் பழமையான திணைக்களமாகிய நில அளவையியல் திணைக்களம், 1935 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க காணிக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், இலங்கையில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகளை முறையாக மற்றும் வினைத் திறன் மிக்கதாக தீர்த்த வைக்கும் நோக்குடன் 1903 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட காணி உரித்து நிர்ணயத் திணைக்களம், 1972 ஆம் அண்டு 01 ஆம இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, 1983 ஆம் ஆண்டு காணி மற்றும் மஹவெலி அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டம் என்னும் வகையில் ஆரம்பிக்கப்பட்டு, 2010 ஜனவரி மாதம் முதல் ஒரு திணைக்களமாக உயர்த்தப்பட்ட காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் என்பன காணி அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இதற்குப் புறம்பாக நில அளவைத் திணைக்களத்தின் கீழ் திணைக்களத்திற்கே உரித்துடைய செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு ஊழியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அளவை செய்தல் மற்றும் படமாக்கல் நிறுவனம் மற்றும் 2002 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க அளவையியல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நில அளவையியல் சேவையின் தொழில் நியமங்களை முறையாக கொண்டு நடாத்தும் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் காணி அளவையியல் சபை ஆகியன காணி அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு காணி கையகப்படுத்தலின்போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கும் நோக்குடன் 1950 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க காணி கையகப்படுத்தல் சட்டத்தின் மூலம் காணி கையகப்படுத்தல் மீளாய்வுச் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

## 1.2. நிறுவனத்தின் இலக்கு, பணிக் கூற்று, நோக்கங்கள்

**இலக்கு**

| |
|---|
| நிலைபேறான அபிவிருத்திக்காக சிறப்பாகப் பயன்படுத்தப்பட்ட நில வளம் |

**பணிக் கூற்று**

| |
|---|
| சிக்கலற்ற உரித்தையும் உச்ச பயன்பாட்டையும் சகலருக்கும் பெற்றுக் கொடுத்து அனைத்து தரப்பினர்கள் சார்பிலும் கொள்கை வகுத்தல், அமுலாக்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு செய்தல் என்பவற்றின் மூலம் நில வளத்தை வினைத்திறன்மிக்கவாறு முகாமை செய்து நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் |

**நோக்கங்கள்**

- தேசிய காணிக் கொள்கையை இற்றைப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- எதிர்கால சந்ததியினரின் பொருட்டு பௌதீகச் சூழலைப் பாதுகாத்தல்.
- அரச காணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- காணிப் பயன்பாட்டுக் கொள்கையினை நடைமுறைப்படுத்துதல்.
- அரச காணிகளின் சிறப்பான பாவனை மற்றும் அவை சீர்குலைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- அரச காணிகளை முறையாக முகாமை செய்தல், மற்றும் பொருத்தமாக காணிகளை காணிகளற்ற மக்களுக்கு பங்கிட்டு வழங்குதல் மற்றும் அவற்றை அபிவிருத்தி செய்தல்.
- அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் அத்தியவசிய செயற்பாடுகளின் பொருட்டு காணிகளை வழங்குதல்
- நாட்டின் சகல காணிகளினதும் உரிமையை உறுதி செய்து உரித்தினைப் பதிவு செய்தல்.

## 1.3. பிரதான செய்றபாடுகள்

- காணி விடயத்துடன் தொடர்புடைய திணைக்களங்கள், சட்டவாக்க நிறுவனங்களின் கொள்கை மற்றும் வேலைத்திட்டங்களை வகுத்தல், நடைமுறைப்படுத்துதல், பின்னூட்டல் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அரச காணிகளை நிர்வகித்தல், முகாமை செய்தல் மற்றும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்.
- காணி நிர்ணயம் செய்தல் மற்றும் காணி உரித்தினை பதிவு செய்வதுடன் தொடர்புடைய செயற்பாடுகள்.
- நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான காணிகளைத் தாமதமின்றி முறையாக வழங்குதல்,
- காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் காணிகளை நிர்வகித்தல் மற்றும் முறையாகப் பிரித்து வழங்குதல்.
- காணிகளை அளத்தல் மற்றும் நில வரைபடம் அமைத்தல், காணி தொடர்பான தகவல்கள் மற்றும் குறித்தசேவைகளை வழங்குதல்.

## 1.4. காணி அமைச்சின் பணிக் குழாத்தினர் ஒழுங்கமைப்பு அட்டவணை



## 1.5. அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்கள்

- இலங்கை நிலஅளவைத் திணைக்களம்
- காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்
- காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்
- காணி மறுசீரமைப்பு ஆணைக்கழு
- காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
- அளவை மற்றும் படவரைவு நிறுவனம்
- காணி அளவைச் சபை
- காணி சுவீகரிப்பு மீளாய்வுச் சபை

# 02. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு

## 2.1. முன்னேற்றம்

### 2.1.1. கொள்கைப் பிரிவு

**சட்ட சீர்திருத்தம்**

| தொ இ | திருத்தம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் சட்டங்கள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 01. | 1931 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்துடன் தொடர்புடைய நெறிமுறைகளை திருத்தம் செய்தல் | • காணி உரித்து திணைக்களம், திருத்தப்பட வேண்டிய விதிமுறைகளை அடையாளம் காண ஒரு குழுவை நியமித்துள்ளது. |
| 02. | 1935 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தினை திருத்தம் செய்தல் | • இந்தச் சட்டத்தைத் திருத்துவதன் முதன்மை நோக்கம், இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து உரிமங்களுக்கும் நிபந்தனையற்ற முழு உரித்தினையும் உடைய அளிப்புப் பத்திரத்தை வழங்குவதற்கான திருத்தப்பட்ட மசோதாவைத் தயாரிப்பதாகும். மேலும் உறுமய வேலைத்திட்டத்தின் மூலம் ஏற்கனவே நோக்கம் அடையப்பட்டு வருவதால், இந்த விஷயம் தொடர்பாக சட்டத்தைத் திருத்தும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. |
| 03. | 1947 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்துடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளில் திருத்தம் செய்தல் | • இந்தச் சட்டத்தில் வணிக மற்றும் விவசாய நோக்கங்களுக்காக காணியின் குத்தகைக் காலத்தை 50 ஆண்டுகளில் இருந்து 99 ஆண்டுகளாக நீட்டிப்பதற்கான தொடர்புடைய ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டு, அதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு, 2024.07.11 ஆம் திகதிய 2392/46 ஆம் இலக்க கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அரச காணிக்கட்டளைச் சட்டத்துடன் தொடர்புடைய அரச காணிக் கட்டளைகள் இலக்கம் 2359/31 மற்றும் 2023.11.23 ஆம் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது. |

| தொஇ | திருத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் சட்டங்கள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 04. | 1950 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தினை திருத்தம் செய்தல் | • சட்ட வரைவாளருடன் கலந்தாலோசித்து இறுதி வரைவு மசோதா தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| 05. | 1969 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க அளவை மற்றும் படவரைவு நிறுவனத்தினை ஸ்தாபித்தல் தொடர்பான சட்டத்தினை திருத்தம் செய்தல். | • அளவை மற்றும் படவரைவு நிறுவனத்தினை ஸ்தாபித்தல் தொடர்பான 1969 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டத்தினை திருத்தம் செய்வதற்குரிய திருத்தப்பட்ட வரைவு மசோதா சட்ட வரைவாளரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| 06. | 1979 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க அரச காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினை திருத்தம் செய்தல் | • சட்டத் திருத்தம் தொடர்பான அமைச்சரவைக் விஞ்ஞாபனத்தின் வரைவு மசோதாவை மற்றும் திருத்தப்பட வேண்டிய சட்ட வரைவு மசோதாவை அமைச்சிற்கு அனுப்புமாறு காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 07. | 1998 அம் ஆண்டு 21 ஆம் இலக்க உரித்து பதிவு செய்யும் சட்டத்தினை திருத்தம் செய்தல் | • 1998 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க காணி உரித்து பதிவு செய்யும் சட்டத்தின் ஒழுங்குவிதிகளில் திருத்தம் செய்தல் தொடர்பில் 2022.12.01 ஆம் திகதி 2308/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன் இது 2024.06.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. |
| 08. | 2002 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க அளவை சட்டத்துடன் தொடர்புடைய நெறிமுறைகளைத் திருத்தம் செய்தல் | • சட்ட வரைவாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவிற்கான ஒப்பந்தம் சட்ட வரைவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 09. | தேசிய காணி ஆணைக்குழுவின் சட்டத்தினைத் தொகுத்து வழங்குதல் | • ஒன்பதாவது பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட இந்த மசோதா, பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்படும் என்பதால், இந்த மசோதாவை புதிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க புதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற வேண்டும் என பாராளுமன்ற சபைத் தலைவரின் செயலாளர் தெரிவித்துள்ளார்.<br><br>• அதற்கமைய ''தேசிய காணி ஆணைக்குழுவின் வரைவு மசோதாவை புதிய பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை பெறுவதற்காக சமர்ப்பித்தல்'' என்பது தொடர்பான புதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. |

| தொஇ | திருத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் சட்டங்கள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 10. | காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் சட்டத்தினை தொகுத்து வழங்குதல் | • ”காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் சட்டத்தினை வரைதல்” என்னும் தலைப்பிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. |
| 11. | முன்வைக்கப்பட்ட புதிய காணிச் சட்டத்தினை தொகுத்து வழங்குதல் | • உத்தேசிக்கப்பட்ட புதிய காணி சட்டத்தனை வரைவு செய்தல் தொடர்பாக முதலாம் குழுகூட்ட அமர்வு 2023.07.20 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் இடப்பெற்றிருந்ததுடன் அதற்கு பின்னர் 05 முறைகள் குழுகூட்ட அமர்வுகள் இடம்பெற்றிருந்தன.<br><br>• ‘‘உத்தேசிக்கப்பட்ட புதிய காணிச் சட்டத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவிற்கு கடமைகளை ஒப்படைத்தல் மற்றும் அந்தக் குழுவின் அதிகாரிகளுக்கு ஒரு கொடுப்பனவை வழங்குதல்’’ என்ற தலைப்பில் 04.08.2023 அன்று ஒரு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் அதற்காக அமைச்சரவையினால் வழங்கப்பட்ட முடிவின் பிரகாரம், உத்தேசிக்கப்பட்ட புதிய காணிச் சட்டத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவின் அதிகாரிகளுக்கு கொடுப்பனவு வழங்க அங்கீகாரம் பெறப்படாத காரணமாக குழு கூட்டத்தில் நடைமுறை சிக்கல்கள் எழுந்துள்ளதால் குழு கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. |
| 12. | காணி நிர்வாகம் தொடர்பான உலக வங்கி வேலைத்திட்டம் | • காணி நிர்வாகம் தொடர்பில் உலக வங்கி வங்கியின் (World Bank Land Conference) மாநாடு 2024 மே 13 முதல் 17 வரை வாஷிங்டன் நகரத்தில் நடைபெற்றது. |

## 2.1.2. காணி எடுத்தற் பிரிவு

| 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காணி கையகப்படுத்தல் தொடர்பான பௌதீக அடிப்படையிலான செயலாற்றுகை | | | | | |
|---|---|---|---|---|---|
| தொ.இ | துறைகளுக்கு ஏற்றவாறு காணிகளைக் கையகப்படுத்துதல் | கையகப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள காணிகளின் எண்ணிக்கை | கையகப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு (ஹெக்டயர்) | ஆட்சி பொறுப்பேற்கப்பட்ட காணியின் அளவு (காணித்துண்டுகள்) | ஆட்சி பொறுப்பேற்கப்பட்ட காணி அளவு (ஹெக்டயர்) |
| 01 | நெடுஞ்சாலைகள் | 22 | 17.433 | 60 | 0.0776 |
| 02 | வடிகாலமைப்பு (மகாவலி) | 03 | 0.8356 | 06 | 6.3773 |
| 03 | குடிநீர் | 06 | 0.4109 | 55 | 1.0418 |
| 04 | நகர அபிவிருத்தி | 02 | 4.1039 | 11 | 0.1597 |
| 05 | பாதுகாப்பு நடவடிக்கைகள் | 17 | 17.269 | 15 | 27.6796 |
| 06 | கிராம விருத்தி | 05 | 12.007 | - | - |
| 07 | உள்நாட்டலுவல்கள் | 38 | 17.6349 | - | - |
| 08 | மாகாண சபைகள் | 15 | 6.7867 | 09 | 0.3675 |
| 09 | வலுசக்தி | 09 | 20.2071 | 04 | 5.8300 |
| 10 | ஏனைய பொது விடயங்கள் (முதலீட்டுச் சபை, மருத்துவமனை, நீதிமன்றம்) | 31 | 1200.589 | 05 | 4.7763 |
| **மொத்தம்** | | **148** | **1297.2771** | **165** | **46.3098** |

## 2.1.3. காணிப்பிரிவு

**2024.01.01. முதல் 2024.12.31 வரை செயலாற்றுகை**

| தொ.இ | செயற்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| **1.** | **கௌரவ அமைச்சர் அவர்களின் அனுமதிக்கு முன்வைத்தல்** | |
| 1.1 | குத்தகை மற்றும் அளிப்புப் பத்திர பரிந்துரைப்புக் கோவைகள் (அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ்) | 2042 |
| 1.2 | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழ் முன்வைக்கப்பட்டிருக்கும் சட்ட ரீதியான இணக்கப்பாடுகள் | 28 |
| **2.** | **கௌரவ ஜனாதிபதி அவர்களின் கையொப்பத்திற்கு அனுப்பி வைத்தல்** (அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ்) | |
| 2.1 | குத்தகை மற்றும் அளிப்புப் பத்திரம் | 769 |
| 2.2 | புனித பூமி அளிப்புப் பத்திரம் | 23 |
| 2.3 | சுனாமி அளிப்புப் பத்திரம் | 148 |
| 2.4 | சட்டரீதியான நிறுவனங்களுக்கு உரிமை மாற்றல் தொடர்பான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் | 105 |
| **3.** | **காணிப் பிரச்சினைகளை குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்** | |
| 3.1 | ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் காணி தொடர்பான பிரச்சினைகளை குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல் | 489 |
| 3.2 | பிரதமர் செயலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் காணி தொடர்பான பிரச்சினைகளை குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல் | 24 |
| 3.3 | பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் காணி தொடர்பான பிரச்சினைகளை குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல் | 1558 |

### 2.1.4. செயற்றிட்டப் பிரிவு

**2024.01.01. முதல் 2024.12.31 வரை செயலாற்றுகை**

| தொ.இ | செயற்றிட்டம் மற்றும் நிறுவனத்தின் பெயர் | | 2024 இலக்கு | 2024 முதல் |
|---|---|---|---|---|
| 01. | பிம்சவிய | • நில அளவைத் திணைக்களம் - நிலஅளவை செய்யப்பட்ட முழு காணிகளின் எண்ணிக்கை | 87,160 | 115,494 |
| | | ii. காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் - 14 ம் பிரிவின் கீழ் அனுமதியின் பின்னர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை | 150,000 | 86,095 |
| | | • பதிவாளர் நாயகத் திணைக்களம் - வழங்கப்பட்டிருக்கும் உரித்து சான்றிதழ்களின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கும் அட்டவணைகளின் எண்ணிக்கை | 150,000 | 11,075<br>50,486 |
| | | காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | | |
| | | * காணிக் கச்சேரி | 50 | 0 |
| | | * காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | 1,000 | 01 |
| | | * கடற்திரள் வரைபடத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அளிப்புப் பத்திரம் | 1,500 | 3,857 |
| | | * நடமாடும் சேவை | 30 | 0 |
| | | * பிரிவு நாட்கள் | 25 | 07 |
| | | * பிரச்சினைகளைத் தீர்த்தல் | 3,500 | 486 |

## 2.2. எதிர்கால இலக்கு

### 2.2.1. காணி எடுத்தற் பிரிவு

| தொஇ | காரணம் | எதிர்பார்க்கப்பட்ட நட்டஈடு மற்றும் வட்டி விண்ணப்பங்களுக்குரிய பெறுமதி (மில்லியன் ரூபா) | எதிர்பார்க்கப்பட்ட நட்டஈடு மற்றும் வட்டி விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நகர அபிவிருத்தி செயற்பாடுகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 70.24 | 32 |
| 2 | தாழ் நிலங்களை உயர்த்துவதற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு காணிகளைக் கையகப்படுத்துதல் | 630 | 46 |
| 3 | கிராமங்களை விருத்தி செய்யும் நோக்குடன் காணிகளைக் கையகப்படுத்துதல் | 862.31 | 38 |
| 4 | பாதுகாப்பு நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளை் கையகப்படுத்துதல் | 1701.49 | 52 |
| 5 | வடிகாலமைப்பு செய்றபாடுகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 29.5 | 16 |
| 6 | கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 63.36 | 17 |
| 7 | கடற்றொழில் நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 30 | 11 |
| 8 | சுகாதார நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 18 | 12 |
| 9 | காட்டு வளம், காட்டு உயிரிணங்களின் நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 350 | 42 |
| 10 | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 110.97 | 19 |
| 11 | நீதிமன்ற அமைச்சின் நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 106 | 10 |
| 12 | விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 420 | 18 |
| 13 | தபாற் நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்துதல் | 102.5 | 08 |
| 14 | வேறு நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளை கையகப்படுத்துதல் | 90.63 | 43 |
| 15 | நிர்வாக செலவுகள் | 15 | 0 |
| | **மொத்தம்** | **4600** | **364** |

### 2.2.2. கொள்கைப் பிரிவு

| தொ இ | வேலைத்திட்டம் / செயற்றிட்டம் / செயற்பாடுகள் | 2025 இலக்கு |
|---|---|---|
| 1. | 1947 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க அரச காணி கட்டளைச் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல் | • சட்ட வரைவு தொகுப்பாளரின் அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளுதல்<br>• ˙வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்ற அனுமதியின் பொருட்டு முன்வைத்தல் |
| 2. | 1950 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தில் திருத்தம் செய்தல். | • சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு புதிய அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கும் மீண்டும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை சமர்ப்பிப்பதற்கும்<br>• சட்டமா அதிபரின் இறுதி அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளுதல்<br>• சட்டமா அதிபரின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளுதல் |
| 3. | 1969 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க அளவை மற்றும் படவரைவு நிறுவனத்தினை ஸ்தாபித்தல் தொடர்பான சட்டத்தினை திருத்தம் செய்தல். | • திருத்தம் செய்யப்பட்ட சட்டத்தை வரைவு செய்தல்<br>• சட்ட வரைவு தொகுப்பாளரின் அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளுதல் |
| 4. | 1998 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க உரிமையினைப் பதிவு செய்யும் சட்டத்தை திருத்தம் செய்தல் | • திருத்தம் செய்யப்பட்ட சட்டத்தை வரைவு செய்தல்<br>• சட்ட வரைவு தொகுப்பாளரின் அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளுதல் |
| 5. | 2002 ஆம் ஆண்டு 7 ம் இலக்க அளவை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுதல் | • சட்ட வரைவு தொகுப்பாளரின் அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளுதல்<br>• திருத்தம் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டு பாராளுமன்ற அனுமதியின் பொருட்டு முன்வைத்தல் |
| 6. | தேசிய காணி ஆணைக்குழுவின் சட்டத்தை தொகுத்தளித்தல் | • பாராளுமன்ற சபைத் தலைவர் அலுவலகத்திற்கு நடைமுறையில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட வரைவிற்காக புதிய அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு மீண்டும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை சமர்ப்பித்தல்<br>• சட்ட வரைவு தொகுப்பாளரால் இறுதியான சட்ட வரைவு தயார்படுத்தல்.<br>• சட்ட வரைவு தொகுப்பாளரின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல்.<br>• சட்ட வரைவு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டு பாராளுமன்ற அனுமதியின் பொருட்டு முன்வைத்தல் |
| 7. | காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் சட்டத்தை தொகுத்தளித்தல் | • சட்ட வரைவு செய்தல் |

### 2.2.3. செயற்றிட்டப் பிரிவு

| தொ இ | வேலைத்திட்டம் / செயற்றிட்டம் / செயற்பாடுகள் | திணைக்களம் | 2025 இலக்கு | |
|---|---|---|---|---|
| 1. | பிம்சவிய | நிலஅளவையியில் திணைக்களம் | அளவை செய்யப்படும் காணித்துண்டுகளின் எண்ணிக்கை | 144,000 |
| | | காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் | 14 ஆம் சட்டத்தின் கீழ் தீர்மானங்களை பரிந்துரை செய்தல் மற்றும் அங்கீகரித்தல் | 104,000 |
| | | பதிவாளர் நாயகம் திணைக்களம் | வழங்கப்படும் உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | 104,000 |
| | | காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | காணிக் கச்சேரி நடாத்துதல் | 250 |
| | | | வழங்கப்படும் அளிப்புப் பத்திரங்களின் எண்ணிக்கை | 7,000 |
| | | | நடாத்தப்படும் நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை | 6,500 |
| | | | பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்துதல் | 3,250 |

### 2.2.4. காணிப் பிரிவு

| வழிமுறைகள் | செயற்பாடுகள் | 2025 இலக்கு |
|---|---|---|
| காணிகளின் பெறுமதி மற்றும் அவற்றின் வினைத்திறனை அதிகரித்தல் | அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு, விவசாய மற்றும் வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் மற்றும் வீடமைப்புத் தேவைகளின் பொருட்டு அளிப்புப் பத்திரங்களை வழங்குதல் | குத்தகை பரிந்துரை 4000<br>குத்தகைப் பத்திரம் 600<br>அளிப்புப் பத்திரம் 1000 |
| அரச காணிகளை முகாமை செய்து நாட்டின் அபிவிருத்தி இலக்கிற்கு பங்களித்தல் | அரசின் வெவ்வேறு நிறுவனங்களுக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள், முப்படைகள் மற்றும் சங்கங்களுக்கு காணிகளை வழங்குதல் | முப்படைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவறறுக்கு கையளிக்க பரிந்துரை செய்தல் 150 |
| | நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை போன்ற நிறுவனங்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்புப் பத்திரங்ககளை வழங்குதல் | அளிப்புப் பத்திரம் 50 |
| மத மற்றும் கலாசார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் | பௌத்த விகாரைகள் மற்றும் ஏனைய மத நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளை தையுதிர்த்தல் | பௌத்த விகாரைகளுக்கான புனித பூமி உறுதிகள் 50<br>ஏனைய மத நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குதல் 20 |
| அனர்த்தங்களுக்கு உள்ளாகின்றவர்களுக்கு காணப்படும் காணிகளிலிருந்து சலுகைகளை வழங்குதல் | சுனாமி அனர்த்தத்திற்கு உள்ளாகியவர்களுக்கு அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகளை வழங்குதல் | சுனாமி அளிப்புப் பத்திரம்100 |
| காணி உரித்தினை சட்ட முறையில் பெற்றுக்கொள்ளுதல் | காணி மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் சட்ட அடிப்படையிலான இணைக்கப்பாட்டுகளின் பொருட்டு காணிகளை வழங்குதல். | கோரிக்கைகளின் அடிப்படையில் |

**நிறுவனத் தலைவர்**

பெயர் : டி.பி.விக்கிரமசிங்ஹ
பதவி : செயலாளர்
திகதி : 2025.02.28

# 03. <u>அத்தியாயம்</u>

**2024 டிசம்பர் 31 உடன் முடிவடையும் வருடத்திற்கான முழு நிதி செயற்றிறன் அறிக்கை**

**3.1. நிதி செயற்றிறன் வெளிப்பாடு**

ஏசீஏ-எப்

**2024.12.31 உடன் முடிவடையும் காலப்பகுதிக்கான நிதி செயற்றிறன் வெளிப்பாடு**

**உண்மைநிலை**

| வரவு செலவு 2024 | | குறிப்பு | 2024 ரூபா | 2023 ரூபா | |
|---|---|---|---|---|---|
| - | **கிடைக்கப்பெற்ற வருமானம்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ - 1 |
| - | தேசிய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ - 1 |
| - | சர்வதேச வியாபாரம் மீதான வரி | 3 | - | - | ஏசீஏ - 1 |
| - | வரி அல்லாத வருமானம் மற்றும் வேறு | 4 | - | - | |
| - | **முழு வருமானம் கிடைக்கப்பெற்றவை (அ)** | | - | - | |
| - | வருமானம் அல்லாத வரவுகள் | | - | - | |
| - | திறைசேரி கட்டுநிதி | | 395,608,000 | 455,497,040 | ஏசீஏ -3 |
| - | வைப்பு | | 13,234,319 | 6,393,652 | ஏசீஏ -4 |
| - | முற்பணக் கணக்கு | | 26,733,552 | 29,119,293 | ஏசீஏ -5 |
| | வேறு பிரதான லெஜ்ஜர் கணக்கு வரவுகள் | | - | - | |
| - | **முழு வருமானம் அல்லாத வரவுகள் (ஆ)** | | **435,575,871** | **491,009,985** | |
| - | **முழு வருமான வரவுகள் மற்றும் வருமானம் அல்லாத வரவுகள் இ = (அ)+ ()ஆ** | | **435,575,871** | **491,009,985** | |
| | **திறைசேரிக்கு பணம் அனுப்புதல் (ஈ)** | | **1,224,926** | **4,290,000** | |
| | **தேறிய வருமான வரவுகள் மற்றும் வருமானம் அல்லாத வரவுகள் உ= (இ)-(ஈ)** | | **434,350,945** | **486,719,985** | |
| | **குறை: செலவுகள்** | | | | |
| - | **நடைமுறைச் செலவுகள்** | | | | |
| 529,650,000 | சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய சேவையாளர் நன்மைகள் | 5 | 500,421,975 | 457,055,266 | ஏசீஏ -2(ii) |
| 206,435,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 166,073,902 | 159,176,863 | ஏசீஏ -2(ii) |
| 5,265,000 | நன்கொடைகள் அன்பளிப்புகள் மற்றும் மாற்றங்கள் | 7 | 3,333,396 | 9,685,989 | ஏசீஏ -2(ii) |
| - | வட்டி செலுத்துதல் | 8 | - | - | ஏசீஏ -2(ii) |
| - | வேறு நடைமுறைச் செலவுகள் | 9 | - | | |
| 741,350,000 | **மொத்த நடைமுறைச் செலவுகள் (ஈ)** | | **669,829,273** | **625,918,118** | |
| - | **மூலதனச் செலவுகள்** | | | | |
| 41,346,293 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும் | 10 | 22,307,042 | 25,924,343 | ஏசீஏ -2(ii) |
| 9,734,153,707 | மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்துதல் | 11 | 2,801,519,933 | 2,272,880,069 | ஏசீஏ -2(ii) |
| 610,000,000 | மூலதன மாற்றம் | 12 | 123,892,264 | 27,714,203 | ஏசீஏ -2(ii) |
| - | நிதிச் சொத்துக்களை கையகப்படுத்திக் கொள்ளுதல் | 13 | - | - | ஏசீஏ -2(ii) |
| 1,500,000 | திறன்களை விருத்தி | 14 | 833,374 | 835,604 | ஏசீஏ -2(ii) |
| 1,497,000,000 | வேறு மூலதனச் செலவுகள் | 15 | 619,560,483 | 298,442,372 | |
| 11,884,000,000 | **முழு மூலதனச் செலவு (எ)** | | **3,568,113,096** | **2,625,796,591** | ஏசீஏ -4 |
| | வைப்பு கொடுப்பனவுகள் | | 37,828,629 | 7,566,184 | |

ஏசீஏ -5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 27,823,264 | 30,827,730 | |
| | வேறு பிரதான லெஜ்ஜர் கணக்குக் கொடுப்பனவுகள் | | - | - | |
| | **பிரதான லெஜ்ஜர் செலவுகள் (ஈ)** | | **65,651,893** | **38,393,914** | |
| | **மொத்த செலவுகள் = (ஊ+உ+ஏ)** | | **4,303,594,261** | **3,290,108,623** | |
| - | **2021 டிசம்பர் 31 இற்கு மீதி ஒ = (உ-ஐ)** | | **(3,869,243,316)** | **(2,803,388,638)** | ஏசீஏ -7 |
| | **கட்டு நிதி இணக்க கூற்றுக்களுக்கு ஏற்ப மீதி** | | **(3,870,160,643)** | **(2,803,388,638)** | |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டு நிதி மீதி** | | **917,327** | **-** | ஏசீஏ - 3 |
| | | | **(3,869,243,316)** | **(2,803,388,638)** | |

## 3.2. நிதி நிலைமை தொடர்பானக் கூற்றுக்கள்

ஏசீஏ-பீ

**2024 டிசம்பர் 31 உடன் முடிவடையும் நிதி நிலைமை தொடர்பான கூற்றுக்கள்**

| | குறிப்பு | உண்மைநிலை | |
|---|---|---|---|
| | | 2024 ரூபா | 2023 ரூபா |
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறிகள், உபகரணங்கள் | ஏசீஏ - 6 | 520,017,682 | 543,362,601 |
| **நிதிப் பொறுப்புகள்** | | | |
| முற்பணக் கணக்கு | ஏசீஏ -5 | 70,354,932 | 69,265,221 |
| பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை | ஏசீஏ -3 | 917,327 | - |
| **மொத்த பொறுப்புகள்** | | **591,289,941** | **612,627,822** |
| **தேறிய பொறுப்புகள் / திணிவு** | | | |
| திறைசேரிக்கான தேறிய பொறுப்புகள் | | 66,576,196 | 40,892,175 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணத் தொகுதி | | 520,017,682 | 543,362,601 |
| கூலி மற்றும் வேலை முற்கொடுப்பனவு தொகுதி | ஏசீஏ -5 (பீ) | | |
| **நடமாடும் பொறுப்புகள்** | | | |
| வைப்புக் கணக்கு | ஏசீஏ -4 | 3,778,737 | 28,373,046 |
| கட்டுநிதி நிலுவை | ஏசீஏ -3 | 917,327 | - |
| **மொத்த பொறுப்புகள்** | | **591,289,941** | **612,627,822** |

பக்க இலக்கம் 07 முதல் 46 வரை ஏசீஏ – 1 முதல் ஏசீஏ – 7 வரையான படிவங்களினூடாக முன்வைக்கப்படும் கணக்கியல் குறிப்புகள் மற்றும் பின்னிணைப்பு பக்கம் இலக்கம் 47 முதல் 82 வரை உள்ளடங்கிய கணக்கியல் குறிப்புகளும் இந்த இறுதி கணக்கியலின் பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களை தயார்படுத்துதல் இந்த நிதி கூற்றுக்கள் தயாரித்தலானது பொது நிதி ஒழுங்குவிதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2024.12.16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலே இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கங்கள், அதனுடன் தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள், மற்றும் ஏனைய கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கியல் ஆவணங்களோடு இணக்கமடையச் செய்யப்பட்டுள்ளதோடு அவை இந்த தொகைகளோடு இணக்கமடைவதாகவும் இங்கே சான்றுபடுத்துகின்றோம்.
நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு வினைத்திறன்மிக்க உள்ள நிர்வாகத் தொகுதி ஒன்று நிறுவனத்திற்குள் காணப்படுவதாகவும் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு உள்ளக நிர்வாக தொகுதியின் ஊடாக மேற்பார்வை செய்வதற்கும் அதனடிப்படையில் அந்தத் தொகுதியினை வினைத்திறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அவ்வப்போது மீளாய்வுகளை மேற்கொள்வதாகவும் இங்கு சான்றுபடுத்துகினறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
டி.பி.விக்கிரமசிங்ஹ
செயலாளர்

திகதி: 2025.02.28

கணக்கீட்டு உத்தியோகத்தர்
டி.பி.விக்கிரமசிங்ஹ
செயலாளர்

திகதி:: 2025.02.28

பிரதான நிதி உத்தியோகத்தர்
(காணிப் பிரிவு)
ஆர்.பி.டி.எஸ்.டி.பெரேரா

திகதி: 2025.02.24

## 3.3. காசுப் பாய்ச்சல் தொடர்பான குறிப்புகள்

ஏசீஏ - சீ

**2024 டிசம்பர் 31 உடன் முடிவடையும் வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் தொடர்பான குறிப்புகள்**

உண்மைநிலை

| | 2024<br>ரூபா | 2023<br>ரூபா |
|---|---|---|
| **நடைமுறைச் செயற்பாடுகளின் மீதான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரி கிடைக்கப்பெற்றவை | - | - |
| கட்டணங்கள், மிகை, தண்டப் பணம் மற்றும் அனுமதிப் பத்திரம் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுமதிகள் | - | - |
| வேறு வருமானத் தலைப்புகளின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்ட வருமானம் | 45,021,005 | 13,517,983 |
| கட்டுநிதி பெறுமதிகள் | 395,608,000 | 455,497,040 |
| முற்பண அறவீடுகள் | 23,068,196 | 23,765,103 |
| வைப்பு கிடைக்கப்பெற்றவை | 13,234,319 | 6,393,652 |
| நடைமுறைச் செயற்பாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் (அ) | **476,931,520** | **499,173,778** |
| **குறைக்கப்பட்டது – நிதி செலவுகள்:** | | |
| தனியாள் வேதனங்கள் மற்றும் நடைமுறைச் செலவுகள் | 367,061,335 | 340,480,329 |
| சலுகைக் கொடுப்பனவுகள் மற்றும் மாற்றங்கள் | 1,441,798 | 7,463,771 |
| வேறு செலவுத் தலைப்புக்களின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவு | 15,384,825 | 1,650,745 |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணக் கணக்கு | 1,224,926 | 4,290,000 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 27,446,764 | 29,814,890 |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 37,828,629 | 7,566,184 |
| **நடைமுறைச் செலவுகளின் பொருட்டு செலவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)** | **450,388,277** | **391,265,919** |
| **நடைமுறைச் செயற்பாடுகளின் பொருட்டு உற்பத்தி செய்யப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (இ)= (அ) - (ஆ)** | **26,543,243** | **107,907,859** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| இலாபம் | - | - |
| உரித்துகள் அகற்றப்படுதலின் ஒதுக்கீடு மற்றும் பௌதீக சொத்துக்களை விற்றல் | - | - |
| கடன் அறவீடுகள் | - | - |
| **நடைமுறைச் செயற்பாடுகளின் பொருட்டு உற்பத்தி செய்யப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (ஈ)** | **-** | **-** |
| **குறைக்கப்பட்டது – நிதிச் செலவுகள் :** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 25,625,916 | 107,907,859 |
| **முதலீட்டு செயற்பாடுகளி மூலம் செலவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் (உ)** | **25,625,916** | **107,907,859** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ) - (உ)** | **(25,625,916)** | **(107,907,859)** |
| நடைமுறை மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளின் பொருட்டு உற்பத்தி செய்யப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (எ) = (இ) + (ஈ) | **917,327** | **-** |
| **நிதி செயற்பாடுகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்** | | |
| உள்நாட்டுக் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| அன்பளிப்புகள் கிடைக்கப்பெற்றவை | - | - |
| **நிதி செயற்பாடுகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஏ)** | **-** | **-** |
| **குறைக்கப்பட்டது - நிதிச் செலவுகள்** | | |
| உள்நாட்டுக் கடனை மிளச் செலுத்துதல் | - | - |
| வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்துதல் | - | - |

| | | |
|---|---|---|
| நிதிச் செய்றபாடுகளின் பொருட்டு செலவு செய்யும் முழு காசப் பாய்ச்சல் ( ஐ) | - | - |
| நிதிச் செய்றபாடுகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஓ) = (ஏ) - (ஐ) | - | - |
| நிதி தேறிய வேறுபாடு (எ)=(ஒ)-(ஓ) | 917,327 | - |
| ஜனவரி 01 ஆம் திகிக்கு ஆரம்ப நிதி நிலுவை | - | - |
| டிசம்பர் 21 ஆம் திகதிக்கு இறுதி நிதி நிலுவை | 917,327 | - |

### 3.4 நிதி வெளியீட்டு குறிப்புகள் - இல்லை

### 3.5 வருமான சேகரிப்பு செயற்றிறன்கள்

ரூபா.000

| வருமானத் தலைப்பு | வருமானத் தலைப்பின் விடயங்கள் | வருமானத் திட்டம் | | ஒன்றுசேர்க்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப திட்டம் | இறுதித் திட்டம் | அளவு ( ரூபா ) | இறதி வருமானம் திட்டத்தின் % ஆக |
| - | - | - | - | - | - |

### 3.6 ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துகின்ற செயற்றிறன்கள்

ரூபா.000

| ஒதுக்கீட்டு வகைகள் | ஒதுக்கப்பட்ட நிதியம் | | நிலைமைச் செலவுகள் | பயன்படுத்திய நிதியங்களை நிறைவு செய்த இறுதி ஒதுக்கீடு % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப நிதியம் | இறுதி நிதியம் | | |
| நடைமுறை | 524,315,000.00 | 567,195,000.00 | 526,425,473.69 | 92.81% |
| மூலதனம் | 15,000,000.00 | 15,000,000.00 | 12,773,286.85 | 85.15% |
| பிம் சவிய காணி | 1,000,000,000.00 | 1,000,000,000.00 | 619,560,482.68 | 61.96% |
| கையகப்படுத்தல் | 9,000,000,000.00 | 9,000,000,000.00 | 2,680,845,408.88 | 29.78% |

### 3.7 நி.ஒ 208 இன் அடிப்படையில் வேறு அமைச்சுகள்/ திணைக்களங்களின் பிரதிநிதிகள் எனும் அடிப்படையில் இந்த திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ பிரதேச சபை என்பவற்றக்கு அனபளிப்புச் செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூபா 000%

| தொ இ | ஒதுக்கீட்டினை பெற்றுக் கொண்ட அமைச்சுகள் / திணைக்களங்கள் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | நிலைமைச் செலவுகள் | பயன்படுத்திய நிதியங்களை வழங்கிய இறுதி ஒதுக்கீடு % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப நிதியம் | இறுதி நிதியம் | | |
| - | - | - | - | - | - | - |

### 3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் செயற்றிறன்கள்

ரூபா.000

| வருமானத் தலைப்பு | தலைப்பு விபரம் | 31.12.2024 திகதிக்கு பொருள் மதிப்பீட்டு அறிக்கைக்கு எற்ப நிலுவை | 31.12.2024 திகதிக்கு நிதி நிலைமை அறிக்கைக்கு ஏற்ப நிலுவை | பின்னர் கணக்கியலுக்கு சேர்க்கப்பட வெண்டியவை | முன்னேற்றம் % ஆக அறிக்கையிடுதல் |
|---|---|---|---|---|---|
| 9152 | இயந்திர உபகரணங்கள் | 274,066,901.92 | 274,066,901.92 | - | - |

### 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கை ஸ்கேன் செய்து இணைப்பு 01 ஆக இணைக்கப்பட்டுள்ளது.

## 4 . அத்தியாயம்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டு திட்டங்களின் அடிப்படையில்)

| விசேட சுட்டி<br>( 2024 ஆம் வருடத்தில் வேலை நிறைவு செய்ய்பட்ட கோவைகள்/ அளிப்புப் பத்திரம் / குத்தகைகளின் எண்ணிக்கை ÷ 2023 ஆம் வருடத்தில் அமைச்சர் அவர்களின் அனுமதி கிடைக்கப்பெறாது இறுதியாக உள்ள கோவைகள் + 2024 வருடத்தில் கா.ஆ.நா. கிடைக்கப் பெற்ற கோவைகள் ) ×100 | எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளின் சதவீதமாக (%) ஆக நிலைமை முடிவுகள் | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| 1. குத்தகை பரிந்துரைகளின் எண்ணிக்கை (விசாரணை 118) | - | - | 67.19% |
| 2. வழங்கப்பட்டிருக்கும் குத்தகைகள் மற்றும் அளிப்புப் பத்திரங்களின் எண்ணிக்கை (விசாரணை 63+88) | - | 75.91% | - |
| 3. ஒப்படைப்பு எண்ணிக்கை (விசாரணை 08) | - | - | 72.91% |
| 4. புனித பூமி உறுதிகளின் எண்ணிக்கை (விசாரணை 04) | - | - | 71.87% |
| 5. சுனாமி அளிப்புப் பத்திரங்களின் எண்ணிக்கை (விசாரணை 16) | - | 85.54% | - |

*** கா.ஆ.நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட கோவைகள் / அளிப்புகள் / குத்தகைகள் என்பவற்றில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக மீண்டும் கா.ஆ.நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கோவைகள்/ அளிப்புகள் / குத்தகைகள் என்பதாக வேறுபடுத்தப்பட்டுள்ளன.**

# 05. அத்தியாயம்

**5.1** அடையாளம் காணப்பட்ட குறித்த நிலையான அபிவிருத்தியின் நோக்குகளைக் குறிப்பிடுக

| நோக்கு/ இலக்கு | இலக்கு | வெற்றிச் சுட்டிகள் | இன்று வரை பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றிகளின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| **1.**அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற அனைத்து வகையான ஏழ்மை நிலையை முடிவுறுத்துதல் | **1.4.** விசேடமான ஏழ்மை நிலையில் காணப்படும் மற்றும் எச்சரிக்கையான நிலையில் காணப்படும் அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் 2030 ஆம் வருடத்தில் பொருளாதார வளம், ஆரம்ப சேவைகள், காணி உரிமை மற்றும் அதனை நிர்வகித்தல் வேறு வழிகளில் சொத்து உரிமை, இயற்கை வளம், பொருத்தமான புதிய தொழில்நுட்பம், நுண்நிதியம் உட்பட நிதி சேவைகளின் பொருட்டு பிரவேசிப்பதற்கு சமனான உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளுதல். | பௌதீக இலக்கை அடைந்து கொள்ளுதல் சதவீதத்தின் அடிப்படையில் | - | குத்தகைப் பரிந்துரை 67.19%<br>கையளிப்புகள் 72.91% | குத்தகைப் பத்திரம் மற்றும் அளிப்புப் பத்திரம் 75.91%<br>சுனாமி அளிப்புகள் 85.54% |
